# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXXI | YEAR OF OUR LORD JESUS CHRIST, 2026 MAY | No. 05


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### நீதிமொழிகள் 31:23-31

23. தன் புருஷன் தேசத்து மூப்பர்களோடே நியாயஸ்தலங்களில் உட்கார்ந்திருக்கையில் பேர்பெற்றவனாயிருக்கிறான்.

24. மெல்லிய புடவைகளை உண்டுபண்ணி விற்கிறாள்; கச்சைகளை வர்த்தகரிடத்தில் ஒப்புவிக்கிறாள்.

25. அவள் உடை பலமும் அலங்காரமுமாயிருக்கிறது; வருங்காலத்தைப் பற்றியும் மகிழுகிறாள்.

26. தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள்; தயையுள்ள போதகம் அவள் நாவின்மேல் இருக்கிறது.

27. அவள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல், தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாயிருக்கிறாள்.

28. அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்; அவள் புருஷனும் அவளைப் பார்த்து:

29. அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு: நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள் என்று அவளைப் புகழுகிறான்.

30. சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்.

31. அவள் கைகளின் பலனை அவளுக்குக் கொடுங்கள்; அவளுடைய செய்கைகள் வாசல்களில் அவளைப் புகழக்கடவது.

## உங்கள் மௌன வேதனை, தெய்வீக நன்மைகளை உருவாக்கும்!

## Your Silent Endurance Will Blossom Into God's Promised Joy!

சகோதரி ஏஞ்சலின்



**அழைப்பின் எதிரொலி** குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் நம் மீட்பரும் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள்.

அன்னையர் தினம் என்பது வெறும் மற்றொரு கொண்டாட்டம் மட்டுமல்ல; அது ஒரு சிறப்பான தருணமாகும். எந்த முறுமுறுப்பும் இன்றி துன்பங்களைச் சகித்துக் கொண்டு, பிறருடைய கனவுகள் நிறைவேற வேண்டும் என்பதற்காகத் தங்களது சொந்தக் கனவுகளைப் பல நேரங்களில் தியாகம் செய்து, தங்கள் சுமைகளை மௌனமாகச் சுமக்கும் பெண்களைக் கௌரவிக்கவும், அங்கீகரிக்கவும் இது ஒரு சிறந்த தருணமாகும்.

நான் அன்னையர் என்று குறிப்பிடும்போது, உயிரியல் ரீதியாகப் பிள்ளைகளைப் பெற்றெடுத்த பெண்களை மட்டும் நான் குறிப்பிடாமல், ஆவிக்குரிய தாய்மார்களையும், தங்களுக்கு வலிக்கும் நேரங்களிலும்கூடத் தன் பிள்ளைகளைச் சுமந்து, வளர்த்து, பாதுகாத்து, தொடர்ந்து நம்பிக்கை கொண்டிருப்பவளுமான ஒவ்வொரு பெண்ணையும் நான் கௌரவிக்கிறேன். பல குடும்பங்களில் தாய்மார்களின் பங்கை அன்போடு ஏற்றுக்கொண்டு செயல்படும் தந்தையர்களையும் நான் இந்த வேளையில் அங்கீகரிக்க விரும்புகிறேன்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் மிகவும் மகிழ்ச்சியான மற்றும் ஆசீர்வதிக்கப்பட்ட அன்னையர் தின வாழ்த்துக்கள்.

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி! கிறிஸ்தவ யூடியூப் சானல்!



போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின்

தினந்தோறும் 2 நிமிட தேவ செய்தி!

ஆங்கிலம், இந்தி மொழிகளில் – அதிகாலை 1.00 மணி முதல்

தமிழ், தெலுங்கு மொழிகளில் – அதிகாலை 2.00 மணி முதல்

மற்றும்

தமிழ் & ஆங்கில செய்திகளும், ஜெபமும்

ஞாயிறு - காலை 8.30 மணி மற்றும் மாலை 6.00 மணி

Subscribe பண்ணுங்கள்! பிறருக்கும் Share பண்ணுங்கள்!!

# ECHO OF HIS CALL - (Marching towards 60th year)

Estd. 1969

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...





**நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் ... யோவான் 11:25.**

**OUR MISSION POLICY**

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


**HON. EDITOR-IN-CHIEF**

Rev. Dr. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.

**Ex MANAGING EDITOR**

Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**GENERAL MANAGER**

Bro. N. Prakasam, M.A, M.Sc(C&P), PGDHRM, MBA.

**ADMINISTRATION**

Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc, M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)

**EDITORIAL BOARD**

Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Rev. Dr. K.R. Rajasekaran
Rev. Dr. William Robert, Ph.D., DD, D.Lit.



**EDITOR, PUBLISHER & PRINTER**

Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858 95661 31858

**E.MAIL**

sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**

www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.org

**YOUTUBE CHANNEL**

Echo of His Call


கர்த்தருக்குள் பிரியமான தேவபிள்ளைகளே!

நமது ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் உங்களை வாழ்த்துகிறோம்!

கடந்த மாதத்தில் நமது பல்வேறு ஊழியங்கள் மூலம் பலதரப்பட்ட மக்களை தேவன் சந்தித்து ஆசீர்வதித்துள்ளார். பாவம், வியாதி, தரித்திரம் ஆகியவற்றிலிருந்து விடுதலைப் பெற்றவர்கள் ஏராளம். நேரடியாகவும், மறைமுகமாகவும் இருந்து நம் ஊழியங்களுடன் இணைந்து செயல்படும் யாவரையும் தேவன் கட்டாயமாக ஆசீர்வதிப்பார். அவருடைய மகிமையை இந்த உலகத்திற்கு எடுத்துச் செல்வதற்காகவே தேவன் நம்மை உருவாக்கியிருக்கிறார். **இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியை சொல்லி வருவார்கள்.** ஏசாயா 43:21

அவருக்காக உழைக்கும் ஒவ்வொருவருக்கும் சிறந்த பரிசுகள் காத்திருக்கின்றன. ஏசாயா 43:4 ல் **உனக்குப் பதிலாக மனுஷர்களையும், உன் ஜீவனுக்கு ஈடாக ஜனங்களையும் கொடுப்பேன்** என்பது தேவனுடைய உறுதிமொழியாக இருக்கிறது.



**நமது தலைமைச் சபையில் நடைபெற்ற வேனிற்கால விடுமுறை வேதாகமப் பள்ளிக்கான முழுநாள் பயிற்சி**

ஏப்ரல்–மே மாதங்களில் பல்வேறு இடங்களில் நடைபெறும் சிறுவர்களுக்கான **வேனிற்கால விடுமுறை வேதாகமப் பள்ளிகளில்** ஊழியம் செய்ய ஒப்புக் கொடுத்தவர்களுக்காக ஒரு முழுநாள் பயிற்சி 19.03.2026 அன்று நமது தேவாலயத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட சுமார் 150 தேவ ஊழியர்களைக் கர்த்தர் தம் வல்லமையினால் நிரப்பினார்.

இதன் விளைவாக ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் இந்தியாவின் பல்வேறு சபைகளிலும், இடங்களிலும் சபைப்பாகுபாடு இன்றி சிறுவர்களுக்கான **வேனிற்கால விடுமுறை வேதாகமப் பள்ளிகள்** நடைபெற்று வருகின்றன. இந்த ஊழியத்தைச் செய்யும் ஸ்தாபனங்களுக்காகவும், சபைகளுக்காகவும், தனிநபர்களுக்காகவும் ஜெபிப்பதும், பொருளாதாரத்தினால் தாங்குவதும் நம் தலையாயக் கடமையாகும்.

**சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு**... 2 தீமோத்தேயு 4:2.

இந்த சிறுவர்களுக்கான **வேனிற்கால விடுமுறை வேதாகமப் பள்ளியானது** மிகவும் வல்லமை வாய்ந்தது. இந்திய தேசத்தில் உள்ள ஏராளம் கல்வியாளர்களும், தொழில் அதிபர்களும், அரசியல்வாதிகளும் இத்தகைய சிறுவர்களுக்கான **வேனிற்கால விடுமுறை**

**வேதாகமப் பள்ளியில்** பயின்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஊழியத்தில், ஆசிரியர்களாக தங்களை இணைத்துக் கொண்டுள்ளவர்கள் அர்ப்பணிப்புடனும், தரிசனத்துடனும் தங்கள் ஊழியத்தை நிறைவேற்றினால் வருங்கால ஊழியர்களும், உலகத் தலைவர்களும் தேவ அன்பினால் நிறைக்கப்படுவது திட்டமான காரியம். **வேனிற்கால விடுமுறை வேதாகமப் பள்ளி** ஆசிரியராக ஊழியம் செய்யும் ஊழியர்கள் அசதியாய், கடமைக்காக செயல்பட்டால் வருங்கால தலைமுறையினர் சுவிசேஷத்திற்கு எதிராளிகளாக மாறி விடுவர். இதை நாம் இன்றைய உலகில் பார்க்கிறோம். எனவே பயபக்தியுடனும், உண்மையுடனும், இந்த ஊழியத்தைச் செய்ய வேண்டும்.

நாங்கள் சற்று கடினமான பாதை வழியாகக் கடந்து சென்று கொண்டிருக்கிறோம். அவற்றை எல்லாம் இங்கு வெளிப்படுத்த முடியாது. ஊழியங்களுக்கு இன்னும் நிரந்தர வருமானம், தகுதி வாய்ந்த ஊழியர்கள், நல்ல அரசியல் சூழ்நிலை, விசேஷித்த அபிஷேகம் - இவை யாவும் தாராளமாகக் கிடைக்க எங்களுக்காக தவறாமல் ஜெபியுங்கள்.

தேவ கிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்து இயேசுவுக்குள்
உங்கள் சகோதரரான,

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்.**

மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

## ஒரு தாயாகிய தேவன்!

வேதாகமம் பெரும்பாலும் தேவனை ஒரு தந்தையின் உருவகத்தைப் பயன் படுத்தியே குறிப்பிடுகிறது. இருப்பினும், அவரை மென்மையான, போஷிக்கின்ற மற்றும் இரக்கமுள்ள ஒரு தாயாகவும் வேதாகமம் உருவகப்படுத்துகிறது.



- **ஒரு தாய் தன் பிள்ளைகளைத் தேற்றுவது போலவே, தேவனும் தம் மக்களைத் தேற்றுகிறார்.** (ஏசாயா 66:13).
- **தம் பிள்ளைகளுக்கு உணவளித்து வளர்க்கும், அக்கறையுள்ள ஒரு தாயாக தேவன் சித்தரிக்கப்படுகிறார்.** (ஏசாயா 66:13).
- **தன் குட்டிகளைப் பாதுகாக்கும் ஒரு ஆக்ரோஷமான தாய்க்குத் தேவன் ஒப்பிடப்படுகிறார்; இது அவருடைய பாதுகாப்பு மிக்க அன்பை வெளிப்படுத்து கிறது.** (ஓசியா 13:8).
- **ஒரு தாய் தன் பிள்ளைகளை மறந்தாலும், தேவன் தம் மக்களை ஒருபோதும் மறப்பதில்லை என்று பிரகடனப்படுத்து கிறார்.** (ஏசாயா 49:15).
- **ஒரு கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துப் பாதுகாப்பது போல, தேவனும் தம் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துப் பாது காக்க வாஞ்சிக்கிறார்.** (மத்தேயு 23:37)

மேற்குறிப்பிடப்பட்ட வேதப்பகுதிகள், தேவனுடைய அன்பானது ஒரு தந்தையின் வலிமையையும், ஒரு தாயின் மென்மையையும் உள்ளடக்கியுள்ளது என்பதை நமக்கு நினைவூட்டுகின்றன. தம் பிள்ளைகள் மீது தேவன் கொண்டுள்ள ஆழமான இரக்கமுள்ள இருதயத்தை வெளிப்படுத்தும், அவருடைய அக்கறையைப் பற்றியும் போஷிக்கும் பண்புகளைப் பற்றியும் நாம் தொடர்ந்து பேசிக் கொண்டே இருக்கலாம்.

வேதாகமத்தில் உள்ள ஒவ்வொரு தாயும், தங்கள் வாழ்க்கையின் சாதாரண ஓட்டத்தில், ஒரு அசாதாரணமான வாக்குத் தத்தத்துடன் தேவன் நுழைந்த ஒரு தருணத்தை அனுபவித்திருக்கின்றனர். சாராளைப் பொறுத்தவரை, அந்தத் தருணம் அவளுடைய கூடாரத்தின் வாசலில் வந்தது.

வேதாகமம் ஆதியாகமம் 18:12–ல் இவ்வாறு பதிவு செய்கிறது: ... **நான் கிழவியும், என் ஆண்டவன் முதிர்ந்த வயதுள்ளவருமான பின்பு, எனக்கு இன்பம் உண்டாயிருக்குமோ ?...** என்று எண்ணிய படியால், சாராள் தனக்குள்ளே நகைத்தாள்.

தேவன் அந்த தருணத்தைக் கண்டார்.

அதேபோல, தேவன் தனக்கு ஒரு பிள்ளையைத் தருவதாக வாக்குத்தத்தம் அளித்தபோது ஆபிரகாமும் நகைத்தார். ஆதியாகமம் 17:17 இவ்வாறு கூறுகிறது: **அப்பொழுது ஆபிரகாம் முகங்குப்புற விழுந்து நகைத்து: நூறு வயதானவனுக்குப் பிள்ளை பிறக்குமோ ?" தொண்ணூறு வயதான சாராள் பிள்ளை பெறுவாளோ ? என்று தன் இருதயத்திலே சொல்லிக்கொண்(டு)டான்.**

சாராள் நகைத்த பிறகு, தேவன் **கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ ? ...** என்று ஆதியாகமம் 18:14 ல் காலத்தால் அழியாத ஒரு கேள்வியைக் கேட்டார்.

எவ்வளவு ஆழமான தீர்க்கதரிசனமான மற்றும் சொல்லாட்சி மிக்கதொரு கேள்வி! இது வெறும் கேள்வி மட்டுமல்ல, தேவனுடைய எல்லையற்ற அதிகாரத்தையும், சர்வ வல்லமையையும் பறைசாற்றும் ஒரு சக்திவாய்ந்த பிரகடனம்.

நாம் இங்கே கவனிக்க வேண்டிய விஷயம் யாதெனில்:

- சாராள் நகைத்தாள்.
- சத்தமாக அல்ல.
- வெளிப்படையாக அல்ல.
- மாறாக, தனக்குள்ளே அமைதியாகச் சிரித்தாள்.

இருப்பினும், தேவன் அதைக் கேட்டார்.

இந்த செய்தியானது பெற்ற தாய், தத்தெடுத்த தாய், ஆவிக்குரிய தாய் – என ஒவ்வொரு தாய்க்கும், மேலும் காத்திருப்பவர்களுக்கும், துயருறுபவர்களுக்கும், இன்னும் விசுவாசிப்பவர்களுக்கும் உரியதாகும்.

- வெளிப்படையாகச் சிரித்தாலும், உள்ளுக்குள் மறைந்திருக்கும் கண்ணீரைச் சுமப்பவர்கள்.
- தங்கள் இருதயங்களில் அமைதியான ஏமாற்றங்களைச் சுமப்பவர்கள்.

## மிக அவசர செய்தி!




நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளை தபால் மூலம் அனுப்புவதில் சில தவிர்க்க முடியாத தடைகள் வெகு சீக்கிரத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்கள் பெயர்களையும், முகவரிகளையும், இ.மெயில் (மின்னஞ்சல்) முகவரிகளையும், வாட்ஸ்அப் எண்களையும் கடிதம் மூலமோ, இ.மெயில்(மின்னஞ்சல்) மூலமோ, தொலைபேசி மூலமோ, வாட்ஸ்அப் மூலமோ குறுஞ்செய்தி மூலமோ எங்களுக்கு உடனே அனுப்புங்கள்.

தொடர்ந்து உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்கு உதவுங்கள்!

எங்கள் முகவரி:

**ECHO OF HIS CALL,**
**10, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005, India**
**Cell: (+91) 98412 71858 / 98410 71858 E.mail: sam@echoofhiscall.org**

- வயது, காலச்சூழல் அல்லது வேதனை காரணமாகத் தங்கள் கனவுகளை ஒதுக்கி வைத்தவர்கள்.
- தாங்கள் கவனிக்கப்படாதவர்களாக வோ, மதிக்கப்படாதவர்களாகவோ, மறக்கப்பட்டவர்களாகவே அல்லது 'காலம் கடந்து விட்டது' என்றோ உணர் பவர்கள் ஆகிய அனைவருக்கும் இது உரியது.

தேவனுடைய பிரியமான பிள்ளை களே, ஒரு தாயின் இருதயத்தில் மறைந்தி ருக்கும் இடங்களைக் கையாளக் கர்த்தர் விரும்புகிறார். அவற்றை வெளிச்சத்திற்குக் கொண்டுவர அல்ல, மாறாக அவற்றைக் குணமாக்கவும், சீர்படுத்தவும் விரும்புகிறார்.

## 1. தாய்மார்கள் அமைதியான சிரிப்பைச் சுமக்கிறார்கள்!

"... **சாராள் தன் உள்ளத்திலே நகைத்து** ..." ஆதியாகமம் 18:12.

அமைதியாகச் சிரிப்பதில் தாய்மார் கள் வல்லவர்கள். நாம் நம்முடைய ஆழமான உணர்வுகளை அரிதாகவே வெளிப்படுத்து கிறோம் அல்லது பகிர்ந்து கொள்கிறோம். அதற்கு மாறாக,

- நாம் முற்றிலும் சோர்ந்து போயிருக்கும் போது, 'நான் நலமாக இருக்கிறேன்' என்றும் சொல்கிறோம்.
- நாம் ஆழமாக வேதனைப்படும்போது, 'பரவாயில்லை' என்றும் சொல்கிறோம்.
- நாம் இன்னும் காத்திருக்கும்போது, 'நான் அதைக் கடந்து வந்துவிட்டேன்' என்றும் சொல்கிறோம்.
- நம் இருதயம் இன்னும் எதற்காகவோ ஏங்கிக்கொண்டிருக்கும்போது, 'எனக்கு அது இனித் தேவையில்லை' என்று சொல்கிறோம்.

ஒருவேளை அதனால்தான், பெண்களைப் புரிந்து கொள்வது கடினம் என்று மக்கள் அடிக்கடி கூறுகிறார்களோ என்னவோ. இங்கே சாராள் சிரித்த அந்தச் சிரிப்பு எதைக் குறிக்கிறது என்பதை நாம் காண்கிறோம்:

- ஏமாற்றம்
- காலதாமதம்
- வேதனை
- தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் உணர்வு

அவளுடைய சிரிப்பு, பல ஆண்டு காலத் துயரத்தாலும், ஏமாற்றத்தாலும் வடிவ மைக்கப்பட்டிருந்தது. அந்த ஏளனப் பார்வை கள், கூர்மையான மற்றும் குற்றம் சாட்டும் வார்த்தைகள், அவளைச் 'சபிக்கப்பட்டவள்' என்று முத்திரை குத்திக்கொண்டே, அவளு டைய சூழ்நிலையை 'ஆவிக்குரிய கண் ணோட்டத்தில்' அணுக முயன்ற தொடர் முயற்சிகள் ஆகியவை காலப்போக்கில் அவளுடைய இருதயத்தை மெல்ல மெல்லக் கடினமாக்கியிருக்க வேண்டும்; அது அவளைப் பாதுகாப்புக் கோரும் ஒருவராக வும், உணர்வற்றவராகவும், உணர்வுரீதியாகத் தன்னை உள்ளுக்குள் சுருக்கிக் கொண்ட வராகவும் மாற்றியிருக்க வேண்டும்.

ஆகவே, ஒருநாள் தான் ஒரு தாயாக மாறுவாள் என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தை அவள் இறுதியாகக் கேட்டபோது, அதைக் கொண்டாடுவதற் குரிய உணர்வு ஏதும் அவளுக்குள் எஞ்சி யிருந்திருக்கும் என்று நான் கருதவில்லை.

தாய்மார்கள் மட்டுமல்ல, நம்மில் பலரும் இதேபோன்ற அமைதியான முறையில் சிரிக்கிறோம்; நாம் தேவனைச் சந்தேகிக்கி றோம் என்பதற்காக அல்ல, மாறாக நம்முடைய இருதயங்களைப் பாதுகாத்துக் கொள்ளவே அவ்வாறு செய்கிறோம்.

இருப்பினும், இங்கே ஒரு அழகான உண்மை யாதெனில், தேவன் அந்தச் சிரிப்பைக் கேட்டார் என்பதே!

இச்சம்பவம் நிகழ்ந்தபோது, சாராள் கூடாரத்திற்கு உள்ளே இருந்தாள். அவளு டைய சிரிப்பு மறைந்திருந்தது; மனிதக் கண்களுக்குப் புலப்படாதிருந்தது; ஆயினும், தேவன் அதைக் கண்டார்; அதைக் கேட்டார்.

நம் வாழ்வில் அத்தகைய தருணங் களை தேவன் எதிர்கொள்ளும்போது, நம்மை அவமானப்படுத்துவதற்காக அவர் அவ்வாறு செய்யாமல், நம்மை குணப்படுத்துவதற் காகவே செய்கிறார்.

## 2. ஒரு தாயின் சந்தேகத்திற்கு தேவனுடைய அறைகூவல்!

ஆபிரகாமின் நகைப்பிற்கும், சாராளின் நகைப்பிற்கும் இடையே ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாடு உள்ளது. ஆபிரகாம் அந்தச் செய்தியைக் கேட்டு, ஆச்சரியத்துடன் நகைத்தார். ஆனால், சாராளோ வலியினாலும், ஏமாற்றத்தினாலும் நகைத்தாள்.

தேவன் சாராளிடம், "அவளுடைய நகைப்பின் காரணத்தைக் கேட்டார்?"

அவள் ஏன் சிரித்தாள் என்று தேவ னுக்குத் தெரியாது என்று நினைக்கிறீர் களா? அவளுடைய வலியை அவர் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறீர்களா?

புதிய ஏற்பாட்டில்கூட, இயேசு கிறிஸ்து ஒரு குருடனைக் குணப்படுத்த விரும்பியபோது, இதேபோன்ற ஒரு கேள்வி யைக் கேட்டார். மாற்கு 10:51-ல் **இயேசு அவனை நோக்கி: நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறாய் என்றார். அதற்கு அந்தக் குருடன்: ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும் என்றான்.** அவன் வேறு என்னதான் கேட்க முடியும்?

தேவன் நம்மிடம் இதுபோன்ற கேள்விகளைக் கேட்பது, அவருக்குத் தெரியாது என்பதற்காக அல்ல; மாறாக, சாராளைப் போலவே அவிசுவாசம் எப்போது, எப்படி நம் இருதயங்களில் அமைதியாகக் குடியேறியது என்பதை நமக்கு உணர்த்தவே தேவன் நம்மிடம் இடைபடுகிறார்.

தேவன் உடனடியாக சாராளை எதிர்கொண்டார்:

... **சாராள் நகைத்து, நான் கிழவியாயிருக்கப் பிள்ளை பெறுவது மெய்யோ என்று சொல்லுவானேன்?** ஆதியாகமம் 18:13.

அவருடைய கடிந்து கொள்ளுதல் தண்டனை அல்ல — அது ஒரு புத்துயிர். சில சமயங்களில், ஒரு தாயின் விசுவாசத்தை மீண்டும் தூண்டுவதற்காக தேவன் அவளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

அன்பான நண்பர்களே, தேவன் நம்மை எதிர்கொள்வது,

- நாம் இன்னும் ஜெபித்துக் கொண்டி ருக்கும் பிள்ளைக்காக
- நாம் எதிர்பார்ப்பதை நிறுத்திய வாக்குத் தத்தத்திற்காக
- நாம் நம்புவதை நிறுத்திய அடையாளத் திற்காக

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....


### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G-கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G-யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| **Account Name** | **: ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST** |
| **Account Number** | **: 1023 2923 805** |
| **Bank Name** | **: STATE BANK OF INDIA** |
| **Branch** | **: TRIPLICANE, CHENNAI - 600 005** |
| **IFSC Code** | **: SBIN 0000249** |
| **SWIFT Code** | **: SBI NIN BB 455** |

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் . 2026 மே 19 முதல் 2026 ஜூன் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

- மே 19 ⇨ நமது மிஷனரி ஊழியர்களின் பெரிதான அர்ப்பணிப்பிற்காக...
- மே 20 ⇨ நமது பணியாளர்கள் அனைவரது குடும்பத்தினர் மீதும் கர்த்தருடைய ஆசீர்வாதம் பொழியப்பட்டு வருவதற்காக...
- மே 21 ⇨ அனைத்து நாடுகளின் மத்தியிலும் நிலவிவரும் போர் பீதி மற்றும் குழப்பங்கள் மத்தியில் தேவ பாதுகாப்பு கொடுத்து வரும் கிருபைக்காக...
- மே 22 ⇨ அரசியல் மற்றும் மத எதிர்ப்புகள் மத்தியிலும் நமது கிறிஸ்தவ ஊழியங்களை வெற்றிகரமாக நடத்தி வரும் கிருபைக்காக ..
- மே 23 ⇨ சமூகத்தின் அனைத்து துறைகளிலும் பெண்களை உயர்த்திய கிருபைக்காக...
- மே 24 ⇨ நமது சுவிசேஷ அச்சகத்தின் தொடர்பணிகளுக்காகவும், அதற்கு உறுதுணையாக உள்ள திறமைவாய்ந்த பணியாளர்களுக்காகவும் ...
- மே 25 ⇨ நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக்கல்லூரிகளில்** புதிய மாணவர்களைக் கொடுத்த கிருபைக்காக ...
- மே 26 ⇨ நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிக்கு** புதிய வேத ஆசிரியரைக் கொடுத்த கிருபைக்காக...
- மே 27 ⇨ தலைமை மற்றும் கிளைச் சபைகளில் நடைபெறும் ஞாயிறு ஆராதனைகளை ஆசீர்வதித்து வருவதற்காக...
- மே 28 ⇨ நமது **அஞ்சல்வழி வேதாகமக்கல்வி** மற்றும் **இறையியல் கல்வி** ஆகியவற்றை கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக...
- மே 29 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய வல்லமைகளிலிருந்தும் பாதுகாப்பு அளித்து வருகிற கிருபைக்காக...
- மே 30 ⇨ நமது தலைமைச் சபை மற்றும் கிளைச் சபை உறுப்பினர்களை ஆசீர்வதித்து வருவதற்காக...
- மே 31 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள், பிரதானக் கட்டளைப் பங்காளர்கள், விண்ணப்ப பங்காளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக...
- ஜூன் 01 ⇨ நமது தலைமை மற்றும் கிளைச் சபைகளால் நடத்தப்படும் அனைத்து விடுமுறை வேதாகமப் பள்ளிகளை ஆசீர்வதிக்க வேண்டி ...
- ஜூன் 02 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** 2026–27ம் கல்வி ஆண்டிற்கான மாணவர்களை ஆசீர்வதிக்க வேண்டி ...
- ஜூன் 03 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** 10–ம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் தேர்வில் சிறப்பாக வெற்றி பெற்றதற்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

- ஜூன் 04 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்களுக்காகவும், அவர்களின் குடும்ப அங்கத்தினர்களுக்காகவும் ...
- ஜூன் 05 ⇨ அனைத்து வழிகளிலும் நமது ஊழியங்கள் விரிவடைய வேண்டி...
- ஜூன் 06 ⇨ நமது ஜெப ஊழியத்தில் உதவி செய்பவர்களுக்காகவும், நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகள் அனைவருக்காகவும் ...
- ஜூன் 07 ⇨ உலகத்தில் உள்ள ஜனாதிபதிகள், பிரதம மந்திரிகள் மற்றும் அரசு அதிகாரிகளுக்காக...
- ஜூன் 08 ⇨ அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான மோதலால் பாதிக்கப்பட்ட நாடுகள், தங்கள் உள்கட்டமைப்பை மீண்டும் கட்டமைத்து விரைவாக மீள வேண்டி...
- ஜூன் 09 ⇨ உலகமெங்கும் நடைபெற்ற விடுமுறை வேதாகமப் பள்ளிகளில் கலந்து கொண்ட குழந்தைகள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாக வளர வேண்டி...
- ஜூன் 10 ⇨ தொடர்ந்து நடைபெற்று வரும் அனைத்துப் போர்களும் முடிவுற்று உலகம் முழுவதும் அமைதி நிலவ வேண்டி...
- ஜூன் 11 ⇨ 2026–27ம் கல்வி ஆண்டிற்கான நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக ...
- ஜூன் 12 ⇨ 2026–27ம் கல்வி ஆண்டிற்கான நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக...
- ஜூன் 13 ⇨ நமது ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் ஆரோக்கியம் மேம்பட வேண்டி ...
- ஜூன் 14 ⇨ கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் ஆசீர்வாதங்களுக்காகவும் அவற்றின் பாதுகாப்பிற்காகவும் ...
- ஜூன் 15 ⇨ சுவிசேஷம் சென்றடையாத பகுதிகள் அனைத்திற்கும் சுவிசேஷத்தைக் கொண்டு சென்றிட வேண்டி...
- ஜூன் 16 ⇨ ஆண்டவரது இராஜ்யம் பூமியில் நிலைப்பட மேலும் கூடுதலான தரிசனங்களை நம்மிடத்தில் அருளவேண்டி ...
- ஜூன் 17 ⇨ உலகத்திலுள்ள அனைத்து இளம் தலைமுறையினரும், குழந்தைகளும் கர்த்தரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டி...
- ஜூன் 18 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் உடல்நலம், தேவ பாதுகாப்பை வேண்டி ...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

- நாம் அமைதியாகக் கைவிட்ட எதிர்காலத்திற்காக
- நாம் இழந்த கனவுகளுக்காகத்தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

செயலிழந்து போயிருந்த ஒரு கருப்பையை அவர் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தார்.

உணர்விழந்து போயிருந்த ஒரு விசுவாசத்தை அவர் உயிர்ப்பித்துக் கொண்டிருந்தார்.

## 3. தேவனுடைய வார்த்தை எவ்விடத்திலும் ஒரு தாயைக் கண்டடைகிறது!

நாம் எங்கு இருந்தாலும் தேவன் நம்மைக் காண்கிறார் என்ற உண்மை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. ஆபிரகாம் கூடாரத்திற்கு வெளியே இருந்தார்; ஆனால், சாராளோ உள்ளே இருந்தாள். ஆயினும், தேவன் அந்த இடத்திலேயே பேசினார்.

அதேபோல, இயேசு கிறிஸ்து நாத் – தான்வேலை அத்திமரத்தின் கீழே கண்டார்.

சாராளைக் கூடாரத்தை விட்டு வெளியே வருமாறு தேவன் அழைக்கவில்லை.

அவள் இருந்த இடத்திலேயே அவர் அவளிடம் பேசினார். ஆமென்! நாம் எங்கு இருந்தாலும் தேவன் நம்மிடம் பேசுகிறார்.

நம்மில் பெரும்பாலானோர் மறைந்தே இருக்கிறோம். வேலைச்சுமையால் மூழ்கிப்போய், இடைவிடாமல் பிறரைப் பராமரித்து, நம் பொறுப்புகளை அமைதியாகச் சுமந்து கொண்டு இருக்கிறோம்.

ஆயினும், தேவன் தாய்மார்களிடம்

- சமையலறைகளில்
- வாகனங்களில்
- பணிபுரியும் இடங்களில்
- ஜெப அறைகளில்
- மருத்துவமனை அறைகளில்
- நள்ளிரவின் கண்ணீரில்
- மௌனமாக போராட்டங்களின் நடுவே
- சிதைந்துபோன கனவுகளின் மத்தியிலே பேசுகிறார்.

அன்பிற்குரிய தேவ பிள்ளைகளே! நம்பிக்கையை இழந்து விடாதீர்கள். நீங்கள் எங்கு இருந்தாலும் அவர் உங்களைக் காண்கிறார். உங்கள் குடும்பத்தாரிடமிருந்தோ, நண்பர்களிடமிருந்தோ, ஏன் உலகத்திடமிருந்தோகூட நீங்கள் மறைந்திருக்கலாம். ஆனால், கர்த்தரிடமிருந்து உங்களால் மறைந்திருக்க முடியாது. ஒரு தாயின் கனிவான அக்கறையோடு அவர் நம்மைக் கண்காணிக்கிறார்.

## 4. வாக்குத்தத்தம் நிறைவேறும் முன்பே, தேவன் ஒரு தாயின் இருதயத்தை மீட்டெடுக்கிறார்!



**சாராளின் இருதயத்தில் விசுவாசம் உருவாக வேண்டியிருந்தது**

சாராளின் கருப்பையில் ஈசாக்கு உருவாகும் முன்பே, அவளுடைய இருதயத்தில் விசுவாசம் உருவாக வேண்டியிருந்தது.

மனிதகுலத்திற்கான தேவனுடைய மாபெரும் வாக்குத்தத்தத்தைச் சுமக்க சாராள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறாள். இது நிகழ்வதற்கு முன்பாக, தேவன் அவளுக்குள்ளே ஒரு கிரியையைச் செய்ய வேண்டியிருந்தது.

தேவன் அவளை நோக்கி, "கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?" என்று கேட்டார்.

இது தேவனுடைய வல்லமையைக் குறித்த ஒரு கேள்வியல்ல; ஆனால், நம்முடைய மனநிலை தேவனுடைய சித்தத்தோடு இசைந்திருக்கிறதா என்பதைக் குறித்த ஒரு கேள்வியாகும்.

தாயே, உன் இருதயம் குணமாக்கப்பட வேண்டும்.

உன் நம்பிக்கை மீட்டெடுக்கப்பட வேண்டும்.

உன் விசுவாசம் தட்டி எழுப்பப்பட வேண்டும்.

உன் மனக்கண் (ஆவிக்குரிய கண்) மீண்டும் திறக்கப்பட வேண்டும்.

"என்னால் கூடாததையும் செய்ய முடியும்" என்று நீ விசுவாசிக்கத் தொடங்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்று தேவன் கூறினார்.

தேவனுடைய பிரியமான பிள்ளைகளே, நாம் எதை இனிமேல் விசுவாசிப்பதில்லையோ, அதை நம்மால் பெற்றெடுக்க முடியாது.

தொடர்ச்சியான மற்றும் நீண்டகால வேதனைகளினால் நம்பிக்கையை இழந்து, உணர்வற்ற நிலையை அடைந்திருக்கும் நம்மில் சிலரோடு தேவன் இப்போது பேசிக் கொண்டிருக்கிறார். தேவனுடைய திட்டத்தோடு நாம் நம்மை இசைவித்துக் கொள்ளும் தருணத்திற்காக அவர் காத்திருக்கிறார் என்று நான் உங்களை ஊக்கப்படுத்த விரும்புகிறேன். நம்முடைய பார்வை தேவனுடைய பார்வையோடு இசைந்திருக்கவில்லை என்றால், நம்முடைய வாழ்வில் அவர் செய்யத் திட்டமிட்டிருப்பதை அவரால் நிறைவேற்ற இயலாது.

நம்மில் சிலருடைய வாழ்வில் தேவன் இக்கணமே கிரியை செய்து கொண்டிருக்கிறார். அவருடைய வாக்குத்தத்தம் நிறைவேறும்வரை நாம் காத்திருக்கும் வேளையில், சோர்வடைவதற்கோ அல்லது தேவன் மீது சந்தேகம் கொள்வதற்கோ பதிலாக, நம்மை

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....

நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்
Diploma in Theology &
Bachelor of Theology
சேப்பாக்கம் & சந்தோஷபுரம், வேளச்சேரி – சென்னை
போதனா மொழி : தமிழ் (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
போதனா மொழி : இந்தி (முழு நேரம் (Residential)) (தங்கிப் படிப்பவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.)
கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !
தொடர்புக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org
உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 56 வருட அனுபவ ஸ்தாபனம்.

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்)
   தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ்.
3. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
4. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
5. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (சேப்பாக்கம், வேளச்சேரி & சந்தோஷபுரம்)
6. கிளைச்சபைகள் – (சந்தோஷபுரம், பாலாஜி நகர் & வேளச்சேரி)
7. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
8. பயிற்சி வகுப்புகள் – கருத்தரங்குகள்
9. சுவிசேஷக் கூட்டங்கள்
10. கைப்பிரதி வினியோகம் – தொடர் ஊழியம்
11. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
12. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி – கிராம ஆங்கிலப் பள்ளி
13. சிறுவர் வேத பாடசாலை (சேப்பாக்கம்) – ஞாயிறு காலை 10.30 மணி
    & (வேளச்சேரி, பாலாஜி நகர் & சந்தோஷபுரம்) மாலை 3.00 மணி
14. அதிகாலை ஆராதனை – ஞாயிறு காலை 5.30 மணி
15. ஆயத்தக் கூட்டம் – ஞாயிறு காலை 8.00 மணி
16. தமிழ் ஆராதனைகள் – ஞாயிறு காலை 8.30 மணி
17. வாலிபர் கூட்டம் – ஞாயிறு காலை 11.00 மணி
18. ஐக்கிய உணவு – ஞாயிறு மதியம் 1.00 மணி
19. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
20. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
21. ஆங்கிலம் – இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
22. கருத்து நேரம் – ஞாயிறு இரவு 7.00 மணி
23. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
24. இந்தி ஆராதனை – புதன் இரவு 7.00 மணி
25. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
26. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
27. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
28. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
29. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி
30. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4.00 மணி
31. இரவு ஜெபம் – 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி
32. உபவாச ஜெபம் – இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
33. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
34. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் – தினமும் இரவு 10.00 மணி (தொலைபேசி மூலம்)
35. பணியாளர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
36. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு

### I. வேதாகமத் தபால் கல்வி


தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்

### II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின் அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல்ல வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## ...கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான் - நீதிமொழிகள் 16:20.

என் ஊழியக் காலங்களின் இடைப்பகுதியில், அயல் நாடுகளில் ஊழியர்கள் எப்படியிருக்கிறார்கள் என்றும், அயல் நாடுகளில் மக்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கை எப்படியிருக்கிறது என்றும், அங்கு ஊழியங்கள் எப்படி நடைபெறுகின்றன என்றும் அறிய எனக்கு விருப்பம் ஏற்பட்டது. இதற்கு சாதகமான ஆள்பலமும், பணபலமும், ஆவிக்குரியத் திறமைகளும் அந்த நாட்களில் என்னிடம் இல்லாதிருந்தன.

ஆனால், ஏதோ ஒரு தைரியத்தால் 1989–ம் வருடம் முதற் பகுதியில் என் ஊழியத் திட்டங்களை என் டயரியில் எழுதும்போது அந்த வருடம் ஆகஸ்ட் மாதம் மலேசியா நாட்டுக்குப் போகப் போவதாக எழுதிவிட்டேன். சுமார் மூன்று மாத காலம் இதனை நான் மறந்து விட்டேன். ஆனால் திடீரென்று ஒருநாள் என் டயரியைப் பார்க்கும்போது மலேசியாவுக்குப்போக வேண்டிய நாள் நெருங்குவதை உணர்ந்து செய்வது அறியாமல் திகைத்தேன். இந்த விஷயத்தை ஆண்டவரிடம் ஜெபத்தின் மூலம் கொண்டு சென்றேன்.

> **நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத் தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.** – பிலிப்பியர் 4:6.

நாட்கள் கடந்தன. ஒரு வழியும் பிறக்கவில்லை. வெளிநாடு சென்று ஊழியம் செய்ய எனக்கு எந்த அந்தஸ்தும் இல்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். எனினும், தேவன்மேல் உள்ள விசுவாசத்தை நான் இழக்கவில்லை.

இப்படியிருக்கையில் மலேசியா போன்ற நாடுகளுக்கு அடிக்கடி சென்று ஊழியம் செய்து வந்த சென்னையிலுள்ள ஒரு சகோதரனை சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. அவரிடம் என் விருப்பத்தைக் கூறினேன். அவர் சென்னையிலுள்ள தன்னுடைய வீட்டிற்கு வந்து ஆலோசனைகளும், தகவல்களும் பெறும்படி என்னிடம் சொன்னார். அதன்படி ஒருநாள் அதிகாலையில் சற்று தூரத்தில் உள்ள அவர் வீட்டுக்குச் சென்றேன். அன்று அவர் வேறு வேலையில் இருப்பதாகக் கூறி அடுத்த நாள் வரச்சொன்னார். அடுத்தநாள், நான் சென்றபோது வேறு ஒரு நாள் வரச் சொன்னார். இப்படி ஒரு மாதகாலமாக அவரைத் தேடிச் சென்றும் ஒன்றும் நடக்காததால் என் நேரமும், பணமும் விரயமாயிற்று. எனக்கு உதவி செய்ய அவருக்கு விருப்பம் இல்லை.

இப்படிப் பலமுறைத் தேடிச் சென்ற பின் ஒருநாள் அவர் என்னைப் பார்த்து, "நீங்கள் மலேசியாவுக்குப் போகமுடியாது. என்னைப் போன்ற வரம்பெற்ற, திறமைசாலிகள்தான் அங்கு போகமுடியும். உங்களை அங்குள்ள யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இனிமேல் என்னிடம் வரக்கூடாது" என்று கூறி என்னைத் திருப்பி அனுப்பிவிட்டார்.

ஆனால், நான் மனம்தளராமல் தேவ சித்தத்துக்குப் பூரணமாய் ஒப்புக் கொடுத்து ஜெபித்துக் கொண்டிருந்தேன். நாட்கள் கடந்தன.

சுமார் இரண்டு வாரங்களுக்குப் பின் ஒருநாள் வழக்கம் போல் எனக்கு வந்தத் தபால்களைப் பிரித்துப் படிக்கும்போது, மலேசியாவில் இருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அதைப் படித்த போது, மலேசியாவில் உள்ள தேவ ஊழியர், காலஞ்சென்ற போதகர் தேவராஜுலு அவர்கள் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தார்.

*கர்த்தருக்குள் அன்பார்ந்த என் சகோதரன் எஸ். சாம் செல்வ ராஜ் அறிவது,*

*நான் ஒரு புத்தகப் பிரியன். இன்று வழக்கம்போல் மலேசியாவில் உள்ள ஒரு பழைய புத்தகக் கடைக்குச் சென்று ஏதாவது பயனுள்ள பழைய புத்தகங்கள் கிடைக்குமா என்று தேடி அலசிக் கொண்டிருந்தபோது, தாங்கள் வெளியிடும் மாதப் பத்திரிகை 'அழைப்பின் எதிரொலியின்' பழைய பிரதி ஒன்று மிகவும் கிழிந்த நிலையில் எனக்குக் கிடைத்தது. அதனைப் படித்துப் பார்த்தபோது ஆண்டவரே என்னிடம் பேசினார்.*

*தங்கள் பத்திரிகையின் பழைய பிரதிகளையும் எனக்கு அனுப்புங்கள். பணச் செலவுகளை நான் அனுப்புகிறேன். தங்களை நேரில் பார்க்க ஆவலாய் இருக்கிறேன். தாங்கள் மலேசியா வருவதாயின் உங்கள் போக்குவரத்து, தங்குமிடம், சாப்பாடு எல்லாவற்றிற்குமான செலவுகளை நான் ஏற்கிறேன். தயவுசெய்து மலேசியாவுக்கு வாருங்கள். சிங்கப்பூர், இந்தோனேஷியா நாடுகளுக்கும் தாங்கள் சென்று ஊழியம் செய்துவர சகல ஏற்பாடுகளையும் நானே செய்கிறேன். தங்களைப்போன்ற தேவ ஊழியர் எங்களுக்குத் தேவை. தங்கள் பதிலை உடனே தெரிவியுங்கள்.*

*இப்படிக்கு,*
*அன்புடன் போதகர் தேவராஜுலு.*

காலஞ்சென்ற போதகர் தேவராஜுலு அவர்கள் மூலம், நான் திட்டமிட்டபடி 1989 ஆகஸ்ட் மாதம் மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்குச் சென்று நூற்றுக்கணக்கான மக்களை பாவம், சாபம், தரித்திரம் ஆகியவற்றிலிருந்து இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் விடுவித்து விட்டு இந்தியா வந்து சேர்ந்தேன். அப்போது மேற்கூறிய நாடுகளில் உள்ள ஏராளமான தேவ ஊழியர் களுடன் நல்ல நட்பையும், தொடர்பையும் தேவன் எனக்கு ஏற்படுத்தி னார். இன்றும் அவர்கள் என் சிறந்த நண்பர்களாக இருக்கின்றனர்.

தொடர்ந்து தேவன் என்னை வெகுவாய் ஆசீர்வதித்து, தென் ஆப்பிரிக்கா, அமெரிக்கா, லண்டன், ஸ்காட்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, கனடா, ஆஸ்திரேலியா, இலங்கை போன்ற தேசங்களுக்குப் பலமுறை அழைத்துச் சென்று என்னை பயன்படுத்தி வருகிறார்.

இப்போது பலர் என்னை வெளிநாடுகளுக்கு வரும்படி அழைத்தாலும், எல்லா நாடுகளுக்கும் செல்ல நேரம் இல்லாத அளவுக்கு தேவன் என்னை வெகுவாய் ஊழியத்தில் பயன்படுத்தி வருகிறார்.

இச்செய்தியை வாசிக்கிற என் அன்பரே, நான் பிரசங்கிக்கிற இயேசு கிறிஸ்துதான் மெய்யான ஆண்டவர். அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார். அவரை நம்புங்கள். அவரிடம் வாருங்கள். அவருக்காக ஊழியம் செய்ய முன் வாருங்கள். அவர் உங்களையும் ஆச்சரியமான வழிகளில் நடத்தி ஆசீர்வதிப்பார்.

**அவர் கன்மலையைத் தண்ணீர்த்தடாகமாகவும், கற்பாறையை நீரூற்றுகளாகவும் மாற்றுகிறார்** – சங்கீதம் 114:8.

---

... 6–ம் பக்கத் தொடர்ச்சி

நாமே சுயபரிசோதனை செய்து கொண்டு, நம்முடைய வாழ்க்கையை அவருடைய சித்தத்தோடு ஒன்றிணைத்துக் கொள்வோமாக!

## 6. தேவன் ஒரு தாயின் சந்தேகத்தை அவளது மகிழ்ச்சியின் முடிவாக மாற்றுகிறார்!

இந்த மாதத்தில், தேவன் நமது சந்தேகங்களை நமது மகிழ்ச்சியாக மாற்றுவாராக. சாராள் ஒருமுறை தேவனுடைய வாக்குத்தத்தத்தைச் சந்தேகித்தாள்; ஆனால், தேவன் குறித்த நேரத்தில் எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றினார். இது உங்களுக்கும் உரிய குறித்த நேரமாக அமையட்டும்.

**... தேவன் என்னை நகைக்கப் பண்ணினார்; இதைக் கேட்கிற யாவரும் என்னோடேகூட நகைப்பார்கள்.**

ஆதியாகமம் 21:6.

- ✓ ஒரு காலத்தில் சந்தேகத்தோடு சிரித்த அதே பெண், இப்போது தனது மகிழ்ச்சியின் நிறைவில் சிரிக்கிறாள்
- ✓ ஒரு காலத்தில் அவநம்பிக்கையை முணுமுணுத்த அதே வாய், இப்போது ஒரு சாட்சியைப் பிரகடனப்படுத்துகிறது
- ✓ ஒரு காலத்தில் மலடாயிருந்த அதே கருப்பை, இப்போது வாக்குத்தத்தத்தைச் சுமந்து கொண்டிருக்கிறது

- அவளது வேதனையை மகிழ்ச்சியாக
- அவளது சந்தேகத்தை விசுவாசமாக
- அவளது மௌனத்தை கொண்டாட்டமாக
- அவளது மறைந்திருந்த சிரிப்பை ஒரு பகிரங்க சாட்சியாக தேவன் மாற்றினார்.

இதுவே தேவன் உங்களுக்கும் எனக்கும் செய்கிற காரியமாகும்.

தேவன் இந்த தாய்மார்களின் வாழ்வில் அடியெடுத்து வைத்தபோது, ஏதோ ஒரு அசாதாரண நிகழ்வு நடந்தது.

| | |
|---|---|
| **இயேசு கிறிஸ்துவின் தாயாகிய மரியாள்** | **ஒரு இரட்சகரைப் பற்றிய வாக்குத்தத்தம்** |
| **சிம்சோனின் தாய்** | **ஒரு இரட்சகனைப் பற்றிய வாக்குத்தத்தம்** |
| **யோவானின் தாயாகிய எலிசபெத்** | **ஒரு சீர்திருத்தவாதியைப் பற்றிய வாக்குத்தத்தம்** |
| **ஈசாக்கின் தாயாகிய சாராள்** | **ஒரு புதிய மரபு வழியைப் பற்றிய வாக்குத்தத்தம்** |

நண்பர்களே! தேவன் அவர்களின் வாழ்வில் குறுக்கிட்டு, குழப்பத்தையும் கலவரத்தையும் ஏற்படுத்தியது போலத் தோன்றியிருக்கலாம். ஆனால், சரியான நேரத்தில், அதாவது, தேவனால் குறிக்கப்பட்ட நேரத்தில், அவர் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார்.

மனம் தளர்ந்துவிடாதீர்கள். தேவன் அவர்களுக்காக அதைச் செய்ய முடிந்ததென்றால், உங்களுக்காகவும் அவரால் அதைச் செய்ய முடியும்.

நீங்கள் இருக்கும் இடத்திலேயே தேவன் உங்களைப் பார்க்கிறார்; உங்கள் குரலைக் கேட்கிறார். இந்த உலகத்தின் கண்களுக்கு நீங்கள் மறைந்திருக்கலாம்; ஆனால், தேவனுடைய கண்களுக்கு நீங்கள் ஒருபோதும் மறைந்திருப்பதில்லை.

தேவன் உங்கள் மறைவிடங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவது உங்களை அவமானப்படுத்துவதற்காக அல்ல. மாறாக, உங்களுக்குப் பெலனளிக்கிறார். சாராளிடம் தேவன் கேட்ட "கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?" என்ற அதே கேள்வியை இப்போது உங்களிடமும் கேட்கிறார்.

இன்றைய நாளில், நமது விசுவாசம் மீண்டும் உயிர்ப்பிக்கப்படட்டும்.

* * * * * * * * * * * *

## அறிவிப்பு

*(+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய போதகரின் பிரதான இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

– ஆசிரியர்


# நெகேமியா வேதாகமக் கல்லூரி

AN ECHO OF HIS CALL INSTITUTION

26வது பட்டமளிப்பு விழா

முழுநேரம் - ஹிந்தி & மாலைநேரம் - தமிழ்

4, ஜூலை 2026 சனிக்கிழமை, மாலை 5:00 மணி



சிறப்பு விருந்தினர்:

REV. DR. S.J. கிங்ஸ்லி,

(COO, JESUS CALLS)

இடம் : பாலர் கல்வி நிலைய அரங்கம்

எம். ஆர். சி. சென்டர், ஸ்கிட்மோர் ஹால்

5/6, ரித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை – 600 007.

- 2026 – 2027 ம் வருட மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது!
- அர்ப்பணிப்புள்ள மாணவர்களை தெரியப்படுத்துங்கள்!!
- முழுநேர இந்தி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை உண்டு!!!
- 2026–27–ம் ஆண்டிற்கான வகுப்புகள் 01–06–2026 அன்று ஆரம்பிக்கப்படும்!!!!

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!

Posted at "Egmore RMS Patrika Channel" RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **S. Sam Selva Raj** |
| A/C No. | : | **1023 2934 679** |
| IFSC | : | **SBIN 00 00 249** |

SWIFT CODE : **SBI NIN BB 455**

### *2. Bank : ICICI Bank*

| | | |
|---|---|---|
| Branch | : | **Anna Salai, Chennai-6** |
| Name | : | **Echo of His Call** |
| A/C No. | : | **6038 0502 2319** |
| IFSC | : | **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : | **1023 2923 805** |
| IFSC | : | **SBIN 00 00 249** |

## OUR QR CODE:

ECHO OF HIS CALL

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**

*****

**E.mail : sam@echoofhiscall.org**

# அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**☆ வருட சந்தா ரூ. 100/–** **☆ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.


## அழைப்பின் எதிரொலி,

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல் (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**


## YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO


**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS Patrika Channel"**
**on 28th APRIL 2026**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**


*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers**, New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**